1970 செப்டம்பர் 2]

புலவர் பொ. பொன்னம்பலம்: மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, திருமயம் அரசினர் உயர்நிலைப்பள்ளி மாணக்கர்கட்கு விளையாடுவதற்கு இடமும், விவசாயத்திற்கு இடமும் இல்லையென்ற குறை நீண்ட நெடுநாட்களாகவே இருந்து வருவதால் அந்தப் பள்ளிக்குப் பின்புறத்தில் உள்ள திடலை அந்தப் பள்ளி மாணவர்கள் விளையாடுகின்ற இடமாகவும், விவசாயத்திற்கான இடமாகவும் ஆக்குவதற்கு அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, பக்கத்திலே உள்ள நிலம் ஒரு டிரஸ்டைச் சேர்ந்தது என்றும், டிரஸ்டினுடைய நிலம் என்பதைப்பற்றி சிவில் வழக்கு நீதிமன்றத்திலே இருப்பதாகவும் குறிப்பிடுகிறார்கள். கல்வித் துறை அதிகாரிகள் அந்த டிரஸ்டோடு பேச்சு வார்த்தை நடத்தி அந்த நிலத்தைப் பெறுவதற்காகச் செய்த முயற்சிகள் பலன் அளிக்கவில்லை. வேறு நிலம் இருந்தால் அதைப் பயன்படுத்துவதற்கு முயற்சிகளை கல்வித் துறையினர் செய்துவருகிறார்கள். மாணவர்கள் அங்கேயுள்ள குளத்தின் கரையிலே விளையாடுகிறார்கள், கோடைகாலத்தில் குளத்தின் ஒரு பகுதியை விளையாடுமிடமாகப் பயன்படுத்துகிறார்கள். வேறு ஏதாவது நிலம் அரசாங்கத்திற்குச் சொந்தமான புறம்போக்கு நிலம் பக்கத்திலே இருக்குமானால் அதை ஒதுக்குவதிலே கடினம் இருக்காது. ஆனால் அந்த நிலம் டிரஸ்டுக்குச் சொந்தமாக இருப்பதால் அதைப்பற்றிய வழக்கு நடந்துகொண்டிருக்கிறது. வழக்கு முடிந்ததற்குப் பின்னால் அதைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம்.

மருத்துவ அதிகாரிகளின் ஓய்வு பெறும் வயது

* 188 வின—திரு. கரு. சீமைச்சாமி: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அரசு அரசாங்க டாக்டர் ஓய்வு பெறும் வயதை 58-ல் இருந்து 55 வயதாகக் குறைப்பது என முடிவு செய்துள்ளதா?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) மருத்துவ அதிகாரிகள் ஓய்வு பெறும் வயதை 58-லிருந்து 55-ஆகக் குறைத்து, 1968 ஜூனில் அரசு ஆணை பிறப்பித்தது. இவ்வாணையின்கீழ், குறிப்பிட்ட மருத்துவ அதிகாரிகளை பொது நலனை முன்னிட்டு ஊழியத்தில் மேலும் நீடித்து வைத்திருப்பது இன்றியமையாதது என்று கருதப்படுகிற நேர்வுகளில் 58 வயது வரை அவர்களைப் பணியில் நீட்டிக்க ஆண்டு தோறும் அனுமதி பெற்று அவர்கள் பணியில் நீட்டிக்கப்படலாம். அண்மையில், 1969 ஜூனில் இவ்வாணைகள் மாற்றியமைக்கப்பட்டன. அதன்படி, இன்றியமையாத நேர்வுகளில் பணி நீட்டிப்பு கொடுக்கப்படுவதற்குப் பதிலாக, பொதுநலனை முன்னிட்டு அவர்கள் 58 வயது வரை ஆண்டு தோறும் அப்பதவிகளில் மீண்டும் நியமிக்கப்படலாம்; ஓய்வு பெறும் வயது 55 என்னும் நிலை தொடர்ந்து நீடிக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுமாதிரி ஓய்வு பெறும் வயது 55 என்று வைக்கப்பட்டிருந்தாலும் சிலபல வேளைகளிலே அரசாங்கம் 55 வயதிற்கு மேலே பதவிநீடித்துக் கொடுப்பதாலே வேலையில்லாத் திண்டாட்டம் தற்பொழுது அதிகமாக இருக்கிற சூழ்நிலையிலும், அடிமட்டத்தில் உள்ள பணியாளர்களுக்கு பதவி உயர்வு வராமல் போகக்கூடிய நிலைமை இருப்பதால், எவ்வளவுதான் திறமைசாலிகளாக இருந்தாலும் அவர்கள் ஓய்வு பெற்ற உடனே வேறு சமூக வேலையில் ஈடுபடலாம். எனவே இந்த 55 வயதிற்குமேல் கண்டிப்பாகப் பதவி நீட்டிப்புக் கொடுக்காமல் இருப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பொதுவாக 55-வது வயதிலே ஓய்வுபெற வேண்டுமென்றுதான் வைக்கப்பட்டிருக்கிறது. உலகப் புகழ் பெற்றவர்கள் இருக்கிறார்கள், இந்தியா முழுமையும் பெருமை, புகழ் பெற்ற டாக்டர்களாக இருக்கிறார்கள். அவர்களுக்கு ஆண்டுதோறும் பதவி நீடிப்புக் கொடுப்பதற்குக் காரணம் அவர்களுடைய பணி கல்லூரிகளுக்கும் பெரிய மருத்துவ மனைகளுக்கும் கிடைக்கும் என்பதால் தான் அவ்வாறு செய்யப்படுகிறது. குறிப்பிட்ட சில துறைகளைப் பொறுத்தவரையில் அந்தத் துறைக்கு அதிகமாக வராமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட துறைகளுக்குத் தகுதி பெற்றவர்கள் கிடைப்பது கடினமாக இருக்கிறது. அப்படிப்பட்ட துறையில் உள்ளவர்களுக்கு 58 வயதுவரை பதவி நீடிப்புக் கொடுக்கப்படுகிறது. 58 வயது வரை எக்ஸ்டன்ஷன் என்று கொடுத்ததை 1969-ஆம் ஆண்டிலிருந்து அப்படிக் கொடுக்காமல் ரீ எம்ப்ளாய் மெண்ட் கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையிலேதான் தரப்படுகிறது. 55 வயதிற்குமேல் யாரையும் வைத்துக் கொள்வதில்லை என்றால் அவர்களுக்குக்கூடக் கடினம் இருக்காது. அவர்களுடைய பணிகள் தேவைப்படுகின்ற கல்லூரிகளுக்கும் பெரிய மருத்துவகுந்தான் கஷ்டம் ஏற்படும். அதனால்தான் இப்படி வைக்கப்பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, is it not a fact that though in theory it is a good idea that experienced senior doctors will be reemployed or continued in service even after they have reached 55, in actual practice what is happening is that when doctors reach 53 or 54, they concentrate on buttering the Government and want to be in their good book. As a result of it, there is discontent in he
in heir good book. As a result of it, there is discontent in the
service. As the Government have already declared in 1969 that no extension of service will be given, will the Government come forward to state that they will not give extension to doctors who have reached 55?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். 55 வயதுவரையிலும் இருக்கக்கூடிய நிலைமைதான் இருக்கிறது. 58 வயதுவரை நீடிக்கிற நிலைமை இன்றியமையாத் தேவைகளுக்கு இன்றியமையாதவர்களை ஏற்றுக் கொள்ளக் கூடிய நிலைமை இருக்கிறது. கூடுமானவரையில் இது கடைப்பிடிக்கப்படுகிறது. உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோன்று

1970 செப்டம்பர் 2]

சிபாரிசுகள் செய்கிறார்கள், எல்லோருமே சிபாரிசுகள் செய்கிறார்கள். எவ்வளவு கூடுமோ அந்த அளவுக்குத் தடுத்து நிறுத்தலாம், அந்த அளவிலேதான் 55 வயது என்பதை நீடிக்காமல் இருப்பதற்குக் கூடுமானவரையில் இந்த ஒரு ஆண்டு காலமாக நிலைமை இருக்கிறது. முக்கியமானவர்களுக்கு எக்ஸ்டன்ஷன் என்று இல்லாமல் ரீ எம்ப்ளாய்மெண்ட் என்று கொடுக்கப்படுகிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்: அப்படி நீடிக்கப்பட்ட டாக்டர்களின் பட்டியல் சொல்லமுடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால் பரிசீலிக்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார் உலகப் புகழ்பெற்ற இந்தியப் புகழ்பெற்ற டாக்டர்களைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உலகப் புகழ்பெற்றவர்கள், இந்தியப் புகழ்பெற்றவர்கள் என்று சொன்னால் அவர்களுக்குப் பதவி ஓய்வு பெறும்பொழுது வயதிலேதான் உலகப் புகழ், இந்தியப் புகழ் எல்லாம் எடுத்துக் கொள்ளப்படுகிறதா? அவர்களுக்கு ப்ரமோஷன் கொடுக்கக்கூடிய பிரச்னையிலும்கூட இது கணக்கு எடுக்கப்படுகிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, உலகப் புகழ் பெறவேண்டுமென்றால் 100 ஆண்டுகள் 150 ஆண்டுகள் இருந்தால்தான் பெறமுடியும். 55 வயதைத் தாண்டினால் அப்படிப் பட்ட புகழைப் பெறமுடியாது. மேலைநாடுகளிலே எல்லாம் பாராட்டத்தக்க அளவிலே உலக மாநாடுகளிலே கலந்துகொண்டு அந்தந்தத் துறைகளைப் பற்றி ஏடுகளை வைத்து அதன்மூலம் புகழ் பெற்றவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுடைய பணிகள் தேவையென்ற பொழுது நீடிப்புக் கொடுக்கப்படுகிறது. மற்ற வகைகளிலே நீடிக்கப்படுவதில்லை.

திரு. கே. விநாயகம்: ஓய்வு பெறக்கூடிய வயதைக் கூட்டினால் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு இருக்காது என்ற முறையில் தஸ்தாவேஜுகளிலேயே இளைஞர்களை வாழவிடு என்று எழுதியிருக்கிறார்களே. அப்படியிருக்கும்பொழுது மாநிலத்திலே ஒருவருக்கு 58 என்ன 60 வரைக்கும் கூட நீடிப்புக் கொடுக்கப்பட்டிருப்பது உண்மைதானா? ஏன் அப்படிச் செய்தார்கள்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஏற்கனவே அப்படிப்பட்ட முறை இருந்திருக்கிறது. டாக்டர்களுக்கு 61, 62 வயது வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. மெட்டர்னிடி சைல்ட் ஹெல்த் ஆபீசருக்கு 62 வரை கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது 58-க்கு மேல் எந்த வகையிலும் நீடிப்பு தரப்படுவது கூடாது என்ற முடிவு இருக்கிறது.

திரு. சோ. கருணாநாதன்: 58 வயதை 55 ஆகக் குறைப்பதன் மூலம் சுமார் ஒரு ஆண்டுக்கு எவ்வளவு பேர்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும் என்று கூறமுடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: உத்தேசமாகச் சொல்வதற்கு முடியாது. கணக்கு எடுத்துத்தான் சொல்லவேண்டும்.